# இலங்கை பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை



அவலோகிதீஷ்வரர் போதிசத்துவர் சிலை, அநுராதபுரத்திற்குப் பின்னைய காலம் (8 - 9 நூற்றாண்டு)
தேசிய அரும்பொருட்காட்சிச்சாலை, கொழும்பு

ECONOMIC HISTORY MUSEUM *of Sri Lanka*

அவலோகிதீஷ்வரர் சிலைகளை தீவின் பல இடங்களிலும் காணமுடிகிறது. அவலோகிதீஷ்வரர் வழிபாடு மகாஜன பாரம்பரியத்திற்கு சொந்தமானது என்பதினால் ஏன் அவ்வளவு பெரும் எண்ணிக்கையான அவரின் சிலைகள் தீவில் காணப்படுகின்றன என்ற கேள்வி எழுகிறது.

தவிர்க்க முடியாத இவ்வினாவிற்கான விடையானது, மாலுமிகளின் கப்பல்கள் உடைவதைக் காக்கின்ற காவல் தெய்வமாக அவலோகிதீஷ்வரர் போதிசத்வர் வழிபடப்பட்டமை பற்றிய அறிவுடன் கலந்திருக்கிறது.

பல நூற்றாண்டுகளாக கடல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த வணிகர்கள் அதிகமாக விஜயம் செய்யும் நாடுகளிடையே இலங்கையும் ஒன்றாகக் காணப்பட்டது. எனவே, இவ்வர்த்தகத் தொடர்புகளினூடாக இது பாரிய செல்வம் நிரம்பிய கஜானாவினையும் அறிவு, கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் அவலோகிதீஷ்வரர் வழிபாடு போன்ற பல்வேறு சமய நம்பிக்கைகளையும் கொண்டிருந்தது.

இவ்வனைத்துப் பலம்களையும் கொண்ட இலங்கையின் பொருளாதாரம் அதன் உண்மையான அளவினை விடவும் பெரியதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. எனவேதான், தொலமி அவரின் புகழ்பூத்த தேசப்படத்தில் இத்தீவினை மிகப் பெரியதொன்றாக வரைந்திருக்கிறார்.

## "இலங்கை பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை"

என்பது இலங்கையில் பொருளாதாரத்தின் முழுக் கதையினையும் ஒரு கூரையின் கீழ் கொண்டு வருகின்ற எமது முயற்சியாகும்.

"சென்றல் பொயின்ற் கட்டிடம்" சதாம் வீதி, கொழும்பு 01இல் 2013 நவெம்பர் 11ஆம் நாளன்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேதகு சனதிபதி – மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் திறந்து வைக்கப்பட்ட "புராணவிலிருந்து ரூபாவிற்கு" அரும்பொருட்காட்சிச்சாலையின் முதல் கட்டமாக விளங்குகின்றதென்பதுடன், இலங்கையின் பொருளாதார வரலாறு தொடர்பான முழுமையானதொரு அரும்பொருட்காட்சிச்சாலையினை நிறுவும் அதன் 2ஆவது கட்டத்தில் மத்திய வங்கி தற்பொழுது ஈடுபட்டு வருகின்றது.

**எனவே, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இப்பாரிய முயற்சிக்கு தாங்களும் இப்பொழுது பங்களிக்கலாம்.**

- **இச்செயற்றிட்டத்திற்கு பெறுமதி சேர்க்கக்கூடியது என நீங்கள் எண்ணும் சிறிய தகவல்கள் ஏதும் உங்கள் வசமுள்ளதா?**
- **இவ்வரும்பொருட்காட்சிச்சாலையிலுள்ள பொருட்களின் பெறுமதியினைக் கூட்டக்கூடிய அரும்பெரும் கலைப்பொருட்கள் உங்களிடமுள்ளதா? அல்லது வரலாற்றுப் பெறுமானங்களைக் கொண்ட அத்தகைய கலைப்பொருட்கள் இருக்குமிடம் பற்றி உங்களுக்கு தெரியுமா? அத்தகைய கலைப்பொருட்கள் நாணயக் குத்திகள் மற்றும் நாணயத் தாள்கள், நூல்கள், ஆவணங்கள், கல்வெட்டுச்சாதனங்கள், புகைப்படங்கள், வர்த்தகப் பொருட்கள், ஆடைகள் போன்றனவாகக் கூட இருக்கலாம்.**
- **நீங்கள் இச்செயற்றிட்டத்திற்கு தன்னிச்சையாகப் பங்களிக்க விரும்புகின்ற வரலாற்றாளரா, தொல்பொருளியலாளரா, கலைஞரா, வடிவமைப்பாளரா அல்லது தொடர்பான துறைகளில் ஒரு புத்திஜீவியா?**

**அவ்வாறாயின், இன்றே எம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். எமக்கு எவ்வாறு உதவி செய்யப் போகின்றீர்கள் என்பதனைச் சொல்லுங்கள்.**

இப்பாரிய முயற்சியில் உங்களைப் போன்ற தாய்நாட்டிற்கு உதவும் பொறுப்புமிக்க பிரசைகளின் பங்களிப்பினை நாம் பெரிதும் வரவேற்கிறோம்


**தொடர்புகள்:**
**கிருத்திகா 0112 477198 / பாக்யா 0112 477669**
**econhistory@cbsl.lk**

பணிப்பாளர்
தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு-1